**நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு**
**முன்மொழிவிற்கான கோரிக்கை**

# முதலீடுகளுக்கான ஒற்றைச் சாளரத்தை (Single Window for Investment) தாபிப்பதற்கான ஆலோசனையை வழங்கும் நிறுவனமொன்றைத் தெரிவு செய்தல்

குறிப்பு இலக்கம்: MF1/11/12(3)/SWS/P1/2026

1. நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் சார்பாக, அமைச்சின் ஆலோசனை பெறுகைக் குழுத் (MCPC) தலைவர் அவர்களால் முதலீடுகளுக்கான **ஒற்றைச் சாளர முறைமையை (Single Window for Investment)** தாபிப்பதற்கான ஆலோசனைச் சேவையை வழங்குவதற்காக இதன் மூலம் முன்மொழிவுகள் கோரப்படுகின்றன.

2. மேற்படி கருத்திட்டத்தின் ஆலோசனைக்கு தகைமை பெறுவதற்குத் தேவையான தகுதிளாவன;
   2.1 கடந்த 10 வருடக் காலப்பகுதிக்குள் முன்மொழியப்பட்டுள்ள பணிகளுக்குச் சமமான அல்லது தேசிய மட்டத்திலான ஆலோசனைப் பணிகளில் குறைந்தது மூன்று (03) வருடங்களை வெற்றிகரமாக நிறைவு செய்திருத்தல்.

3. இச்சேவைகளை நிறைவேற்றுவதற்குத் தாம் தகைமை பெற்றுள்ளதாகக் குறிப்பிடப்படும் தகவல்கள் (கையேடுகள், சமமான பணிகள் பற்றிய விபரங்கள், சமமான சூழ்நிலைகளின் கீழ் பெற்ற அனுபவம், இணைத்துக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் ஊழியர்களிடம் தகுந்த நிபுணத்துவம் காணப்படுகின்றமையை உறுதிப்படுத்தல் போன்றவை) ஆர்வமுள்ள ஆலோசகர்களினால் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. தேசிய பெறுகை ஆணைக்குழுவினால் பிரசுரிக்கப்பட்ட, 2007 ஆகஸ்ட் பதிப்பின் 'ஆலோசகர்களைத் தெரிவு செய்தலும் சேவையில் அமர்த்தலும்' தொடர்பான வழிகாட்டல்களில் குறிப்பிடப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க, இக் கோரிக்கை ஆவணத்தில் விபரிக்கப்பட்டுள்ள செய்முறைகள், **தரம் மற்றும் செலவு என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட தெரிவு (QCBS)** முறைமையின் கீழ் ஆலோசனை நிறுவனம் தெரிவு செய்யப்படும்.

5. ஆர்வமுள்ள ஆலோசகர்கள், ஆங்கில மொழியில் தயார் செய்யப்பட்ட முழுமையான விண்ணப்பப் படிவம் மற்றும் ஆவணத் தொகுதியை, தமது எழுத்து மூலமான கோரிக்கையை, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் (அறை இலக்கம் 217) பணிப்பாளரிடம் சமர்ப்பிப்பதன் மூலம் 2026.08.04 ஆம் திகதி முதல் 2026.08.24 ஆம் திகதி வரையிலான அலுவலக நாட்களில் மு.ப 09.00 மணி முதல் பி.ப 15.00 மணி வரையிலான காலப்பகுதிக்குள், மீளச் செலுத்தப்படாத ரூபா. 10,000.00 (பத்தாயிரம்) கட்டணத்தை (சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரி - SSCL மற்றும் பெறுமதி சேர் வரி (VAT) உள்ளடங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். கட்டணங்கள் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

6. விண்ணப்பப் படிவம் மற்றும் ஆவணங்களைச் சாதாரண அலுவலக நேரங்களில் நிதி அமைச்சின் 217 ஆம் இலக்க அறையில் இலவசமாகப் பார்வையிடலாம். மேலதிக விபரங்களுக்கு, பணிப்பாளருடன் (நிறுவன நடவடிக்கைகள்) தொலைபேசி இலக்கம் 0112 484 600 (நீடிப்பு: 1581) ஊடாகத் தொடர்பு கொள்ள முடியும்.

7. கேள்விகள் மூடப்பட்ட இரு உறைகளில் இடப்பட்டு (நிதி மற்றும் தொழில்நுட்பம் என தனித்தனியாக) **2026.08.25** ஆம் திகதி மாலை 14.00 (பி.ப 2.00) மணிக்கு அல்லது அதற்கு முன்னராக தலைவர், அமைச்சின் ஆலோசகர் பெறுகைக் குழு, நிதி அமைச்சு, செயலகம், கொழும்பு 01 என்ற முகவரிக்கு நேரடியாக வருகை தந்து, **217ஆம் இலக்க அறையில்** வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடமுடியும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்ப முடியும். கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் **"SELECTION OF A CONSULTANCY FIRM FOR ESTABLISHMENT OF A SINGLE WINDOW FOR INVESTMENT"** (முதலீடுகளுக்காக ஒற்றைச் சாளரமொன்றைத் தாபிப்பதற்கான ஆலோசனை நிறுவனமொன்றைத் தெரிவு செய்தல்) எனக் குறிப்பிடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கோரிக்கைகள் நிராகரிக்கப்படும். தொழில்நுட்ப முன்மொழிவுகள் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் நேரம் முடிவடைந்தவுடன் உடனடியாகத் திறக்கப்படும், அச்சந்தர்ப்பத்தில் ஆலோசனை நிறுவனம் அல்லது நிறுவனத்தின் அதிகாரம் பெற்ற பிரதிநிதி கலந்துகொள்ள முடியும்.

8. முன்மொழிவுகள் தொடர்பான உத்தியோகபூர்வ கலந்துரையாடல் 2026.08.11 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் புதிய கேட்போர் கூடத்தில் (2 ஆம் மாடி), இடம்பெறும்.

**செயலாளர்**
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
செயலகம்
கொழும்பு 01